அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** | |

## பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய்க்குறில் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. ☐ தொண்ணூறு
   2. ☐ இருநூற்றுப்பதினாறு
   3. ☐ இருநூற்றுநாற்பத்தேழு
   4. ☐ நூற்றிருபத்தாறு

2. தமிழ்மொழியைச் செம்மொழி என்று முதலில் கூறிய வெளிநாட்டு அறிஞர்
   1. ☐ அல்பேர்ட் சுவைட்சர்
   2. ☐ இராபர்ட் கார்டுவெல்
   3. ☐ யோசப் பெசுகி
   4. ☐ யீ. யு. போப்

3. மன்னனின் நல்லாட்சியினால் மக்களின் கலி தீர்ந்தது. இதில் கலி என்பது
   1. ☐ வறுமை
   2. ☐ மேன்மை
   3. ☐ அழுகை
   4. ☐ உவகை

4. இளவேனிற் காலத்தில் தெற்கிலிருந்து வீசும் காற்று
   1. ☐ வாடை
   2. ☐ கோடை
   3. ☐ தென்றல்
   4. ☐ கொண்டல்

5. மூத்தோரின் ஆசீர்வாதம் என்றும் துணையாகும். ஆசீர்வாதம் என்ற வடசொல்லின் தமிழ்ச்சொல்
   1. ☐ மதியுரை
   2. ☐ வாழ்த்து
   3. ☐ ஆணை
   4. ☐ அனுசரணை

6. உயர்வுநவிற்சி அணியாக அமைவது
   1. ☐ சேவல்கள் கூவிக் கதிரவனை வா! வா! என அழைத்தன.
   2. ☐ வானளாவிய வளமனைகள் நிறைந்த நாடு.
   3. ☐ வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
   4. ☐ ஓடுமீன் ஓட உறுமீனுக்காகக் காத்திருந்த கொக்கு.

7. பாடுகின்றோர் எல்லோரும் கவிஞரல்லர். இதில் கவிஞரல்லர் என்பது
1. ☐ உடன்பாடு
2. ☐ எதிர்மறை
3. ☐ பெயரெச்சம்
4. ☐ வினையெச்சம்

8. 'சுவிற்சர்லாந்தின் சிறந்த தமிழ் மாணவர்' என்ற விருதினைப் பெற்றவரின் பெற்றோர் மிகமகிழ்ந்தனர். இதற்குப் பொருத்தமான மரபுச்சொற்றொடர்
1. ☐ உச்சிகுளிர்தல்
2. ☐ உச்சிமுகர்தல்
3. ☐ நாணிக்கோணுதல்
4. ☐ கண்திறத்தல்

9. இராவண காவியத்தின் ஆசிரியர்
1. ☐ கம்பர்
2. ☐ புலவர் குழந்தை
3. ☐ வால்மீகி
4. ☐ துளசிதாசர்

10. கிண்டலும் கேலியும் நிறைந்த வசைப்பாடல்களை உடனுக்குடன் பாட வல்லவர்
1. ☐ தாயுமானவர்
2. ☐ உமறுப்புலவர்
3. ☐ காளமேகப்புலவர்
4. ☐ பட்டினத்தடிகள்

11. மாலைப்பொழுதில் வானம் சிவந்து சிவந்து காணப்பட்டது. சிவந்து சிவந்து என்பதன் அடுக்கிடுக்கு வடிவம்
1. ☐ சிவசிவந்து
2. ☐ செக்கச்சிவப்பு
3. ☐ சிவப்புச்சிவப்பு
4. ☐ செக்கச்சிவந்து

12. நேற்று கடும்மழை பெய்தது. போக்குவரத்து பாதிக்கப்படவில்லை. இச்சொல்லியங்களை இணைப்பதற்கான இணைப்பிடைச்சொல்
1. ☐ ஏனென்றால்
2. ☐ அதனால்
3. ☐ ஆயினும்
4. ☐ ஆகவே

13. திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என நிறுவியவர்
   1. ☐ தேவநேயப் பாவாணர்
   2. ☐ பரிதிமாற் கலைஞர்
   3. ☐ பெருஞ்சித்திரனார்
   4. ☐ பாரதிதாசன்

14. எமது நாடு அழகும் சிறப்பும் நிறைந்தது. இதில் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் பெற்று வந்துள்ள சொல்
   1. ☐ அழகு
   2. ☐ எமது
   3. ☐ சிறப்பு
   4. ☐ நாடு

15. ஒரு நூலகப்படுகொலை என்று உலக நாளிதழ்களில் பதிவாகிய நிகழ்வு
   1. ☐ யாழ்நூலக அமைப்பு
   2. ☐ யாழ்நூலக எரிப்பு
   3. ☐ யாழ்நூலக உருவாக்கம்
   4. ☐ யாழ்நூலக மீளாக்கம்

16. செந்தாமரை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. ☐ செம் + தாமரை
   2. ☐ செழுமை + தாமரை
   3. ☐ செம்மை + தாமரை
   4. ☐ செழிப்பு + தாமரை

17. செய்யுள் வகைகளுள் செப்பலோசையைக் கொண்டது
   1. ☐ வெண்பா
   2. ☐ ஆசிரியப்பா
   3. ☐ கலிப்பா
   4. ☐ வஞ்சிப்பா

18. ஐயோ! மக்கள் பசியால் வாடுகிறார்களே! இச்சொல்லியம் உணர்த்தும் பொருள்
   1. ☐ வியப்பு
   2. ☐ பரிவு
   3. ☐ பெருமிதம்
   4. ☐ உவகை

19. கொடை கொடுத்து துன்பப்பட்டவர் எங்கும் இல்லை என்ற பொருள்தரும் பழமொழி
   1. ☐ அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
   2. ☐ உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது
   3. ☐ ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
   4. ☐ இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை

20. தமிழிலக்கிய வரலாற்றில் இசுலாமிய இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலம்
   1. ☐ பல்லவர் காலம்
   2. ☐ நாயக்கர் காலம்
   3. ☐ சோழர் காலம்
   4. ☐ ஐரோப்பியர் காலம்

21. வானில் விண்மீன்கள் கண் சிமிட்டின. இதில் வந்துள்ள ஏழாம் வேற்றுமை உருபு
   1. ☐ கள்
   2. ☐ கண்
   3. ☐ இல்
   4. ☐ விண்

22. வெள்ளம் தீப்பட்டது என வெரீஇ... இதில் வெரீஇ என்பது
   1. ☐ குற்றியலிகரம் பெற்ற சொல்
   2. ☐ உயிரளபெடை பெற்ற சொல்
   3. ☐ ஒற்றளபெடை பெற்ற சொல்
   4. ☐ முற்றியலுகரம் பெற்ற சொல்

23. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கவிதை வரியின் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   1. ☐ விடாமுயற்சி
   2. ☐ விட்டுக்கொடுத்தல்
   3. ☐ மனச்சோர்வு
   4. ☐ ஏமாற்றம்

24. பவளம் போன்ற வாய் உடையவள். இதில் பவளம் போன்ற வாய் என்பது
   1. ☐ தொழில் உவமையணி
   2. ☐ பண்பு உவமையணி
   3. ☐ பயன் உவமையணி
   4. ☐ உருவக அணி

25. மூவேந்தர் புகழைப் பாடுபொருளாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்
   1. ☐ நான்மணிக்கடிகை
   2. ☐ முத்தொள்ளாயிரம்
   3. ☐ முதுமொழிக்காஞ்சி
   4. ☐ திரிகடுகம்

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைத்தொகுப்புகள் இரண்டு எழுதுக.

________________________________________

2. இன்றைய உலகில் விளம்பரங்களினால் ஏற்படும் நன்மை, தீமை ஒவ்வொன்று எழுதுக.

________________________________________

________________________________________

3. திறனாய்வுக்கலை எவற்றுக்குத் துணை செய்கிறது?

________________________________________

________________________________________

4. தமிழ்மொழி 'உயர்தனிச் செம்மொழி' என்ற சிறப்புப் பெறுவதற்கான காரணம் யாது?

________________________________________

________________________________________

5. தொகைநிலைத் தொடரின் வகைகளுள் இரண்டினைத் தந்து, அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

________________________________________

________________________________________

6. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.
இதில் வந்துள்ள எதுகை, மோனை என்பவற்றை எழுதுக.

________________________________________

________________________________________

7. வியங்கோட்சொல்லியப் பொருள்களுள் இரண்டிற்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

________________________________________

________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**3. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. தாய்நாடு

2. 

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

(4 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வான்உறு மதியை அடைந்ததுஉன் வதனம்
மறிகடல் புகுந்ததுஉன் கீர்த்தி
கான்உறு புலியை அடைந்ததுஉன் வீரம்
கற்பகம் அடைந்ததுஉன் கரங்கள்
தேன்உறு மலராள் அரிஇடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுஉன் தேகம்
நானும்என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நம்தயா பரனே

1. இப்பாடல் யாரை விளித்துப் பாடப்பட்டுள்ளது?

______________________________

2. செல்வத்தின் வடிவான திருமகள் திருமாலிடம் சென்றுவிட்டதாகக் கூறும் பாடல் வரி எது?

_______________________________________________

3. இப்பாடல் வெளிப்படுத்தும் உணர்வு யாது?

_______________________________________________

(3X1=3 புள்ளிகள்)

**5. பந்தியை வாசித்து, அதன் மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

இயல்பாகத் தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கின்றோம். உயிருள்ளவையும் உயிரற்றவையும் இயற்கையுள் அடங்கும். இவ்வியற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது நாம் வாழும் புவி. நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு, நீர், காற்று என்பவற்றை இயற்கையிலிருந்தே பெற்றுக் கொள்கின்றோம். இவற்றைவிட கதிரவனொளி, மரங்கள், நிலநெய், மணல் என மக்களுக்குப் பயன்படும் இயற்கை வளத்தின் பயன்கள் எண்ணிலடங்காதவை. மாந்தராகிய நாமும் இயற்கையின் ஒரு பகுதியே என்பதை மறந்துவிடுகிறோம். அதனால், இயற்கையைப் பெருமளவில் மாசுபடுத்துகிறோம்; இயற்கை வளங்களைத் தேவைக்கு மேலாகப் பயன்படுத்துகிறோம்; அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறை இல்லாதவர்களாக வாழ்கிறோம். ஒரு மாந்தன் தனது தலைமுறைகளுக்காகத் தேடிவைக்கும் சொத்துகளில் இயற்கை வளங்களே முதன்மையானவை. ஆனாலும், இயற்கையை அழித்துப் பொருள் தேடுவதையே நோக்கமாகக் கொண்டு மாந்த இனம் மாறிக்கொண்டிருக்கிறது. இந்நிலை மாறவேண்டுமானால் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இயற்கையோடு இணைந்த பண்பட்ட வாழ்வை வாழ வேண்டும். தன்னலம் இல்லாத பொதுநலம் பேணும் மனப்பாங்கு மேம்படும்போதே இது நிறைவேறும். 'நீர் இன்றி அமையாது உலகு' என்ற வள்ளுவர் கூற்றை மனத்தில் கொள்வோம். இவ்வுலகில் நீரே முதன்மையானது. நீர்வளம் பாதுகாக்கப்பட்டால் ஏனைய வளங்களும் பாதுகாக்கப்படுவதோடு சூழல்வெப்பநிலையும் சமநிலைப்படுத்தப்படும். ஆகவே, நாம் இயற்கையைப் பேணி அடுத்தடுத்த தலைமுறைகளின் நல்வாழ்வுக்கு வழி சமைப்போம்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________



(4 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, அதனைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

(4 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இராவண காவியம்
2. கணினியும் மாந்த வாழ்வும்
3. புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மூதாளர்கள்

உள்ளடக்கக் குறிப்புகள்:

- புலம்பெயர்ந்த காலத்தில் அவர்களின் வாழ்வுநிலை
- மொழி, கலை, பண்பாடுகளைப் பேணுவதில் அவர்களின் பங்கு
- இன்று அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும்

(15 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாந்த இனத்தின் வளர்ச்சியின் வெளிப்பாடு மொழி எனலாம். தொடக்க காலத்தில் உடல் அசைவுகள் மூலமாகவும் அதன்பின் ஒலிகளை எழுப்பியும் கருத்துப் பரிமாற்றம் செய்தனர். அவ்வொலிகள் பேச்சுமொழியாக உருவாகியது. அதன் படிநிலை வளர்ச்சியாக எழுத்துமொழி தோன்றியது. பரந்துபட்டு வாழ்ந்த மாந்தர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசத்தொடங்கினர். பல இனத்துக்கும் அதன் அடையாளம் மொழியேயாகும். அவ்வகையில் தமிழ்மொழியைப் பேசுவோர் தமிழர் என அழைக்கப்படுகின்றனர். தமிழ்மொழி தோன்றியகாலம் எதுவென இதுவரை வரையறுக்கப்படவில்லை. அவ்வாறு தொன்மையும் செழுமையும் மிக்க தமிழ்மொழியினுள் பிறமொழிகளின் ஊடுருவல் காலத்திற்குக் காலம் நிகழ்ந்தன. அரசியல், வணிகம், குடியேற்றம் போன்ற காரணங்களினால் மொழிக்கலப்பு இயல்பாக நடைபெறும். மிகப் பழைமையான காலந்தொட்டே வடமொழி தமிழோடு கலக்கத் தொடங்கியது. பிற்காலத்தில் தமிழ்மொழி மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாகத் திட்டமிட்டு வடமொழிச் சொற்களைத் தமிழ்மொழியில் கலந்தனர். இதற்கு அரசியல் செல்வாக்கும் ஒரு காரணமாக அமைந்தது. வணிகத் தொடர்பின் காரணமாக கிரேக்கம், அரபு, பாரசீகம் போன்ற மொழிகள் தமிழில் கலக்கத் தொடங்கின. ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து போர்த்துக்கீசம், ஒல்லாந்தம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தமிழினுள் கலந்து கொண்டன. கால மாற்றங்களுக்கேற்ப இவற்றை உள்வாங்கியவாறு தமிழ்மொழி வீறுநடை போட்டுக் கொண்டிருந்தாலும், தமிழர்களாகிய நாம் முடிந்தவரை தூய தமிழில் பேசியும் எழுதியும் தமிழின் தனித்தன்மையான சொல்வளத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

1. தொடக்க காலத்தில் எவ்வாறு கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டது? (1 புள்ளி)

_______________________________________________

2. மொழிக்கலப்பு இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை? (2 புள்ளிகள்)

_______________________________________________

3. பிற்காலத்தில் தமிழ்மொழியோடு வடமொழி கலந்தமைக்கான காரணம் யாது? (1 புள்ளி)

_______________________________________________

4. வணிகத்தொடர்பு காரணமாகத் தமிழ்மொழியோடு கலந்த பிறமொழிகள் எவை? (2 புள்ளிகள்)

_______________________________________________

5. 'தமிழ்மொழியின் தோற்றத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை' இக்கூற்று வெளிப்படுத்தும் கருத்து யாது? (2 புள்ளிகள்)

_______________________________________________

6. மொழிக்கலப்பு இடம்பெறுவதை எவ்வாறு தடுக்கலாம்? (1 புள்ளி)

_______________________________________________

(9 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுக்கு மிகப் பொருத்தமான தலைப்பினைத் தெரிவுசெய்து எழுதுக.**
**(ஒரு தலைப்பு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

1. விண்ணுந்துப் பயணிகளுக்கான அறிவிப்பு
2. காலநிலை அறிவிப்பு
3. தொடருந்துப் பயணிகளுக்கான அறிவிப்பு
4. தொடருந்து மேடை மாற்ற அறிவிப்பு

அ. ______________________________

பேர்ண் தொடருந்து நிலையத்தில் ஆறாம் மேடையிலிருந்து சூரிச் விண்ணுந்து நிலையத்தை நோக்கிச் செல்லும் தொடருந்து சற்றுத் தாமதமாகப் புறப்படவுள்ளது. விரைவாக விண்ணுந்து நிலையத்தைச் சென்றடைய விரும்புபவர்கள் யெனிவா நகரத்திலிருந்து வரும் தொடருந்தில் பயணிக்கலாம். பதினைந்தாம் மேடையில் 11:35 மணிக்கு புறப்படும் இத்தொடருந்து 12:50 மணிக்குச் சூரிச் விண்ணுந்து நிலையத்தைச் சென்றடையும்.

ஆ. ______________________________

இன்று ஐரோப்பா முழுவதும் சீரற்ற காலநிலை நிலவுவதை எல்லோரும் அறிவீர்கள். உங்களின் பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். அதன் அடிப்படையில், சூரிச் விண்ணுந்து நிலையத்திலிருந்து பேர்லின் நோக்கிப் பறக்கவுள்ள விமானம் சீரற்ற காலநிலையால் நிறுத்தப்படுகிறது. உங்களுக்கான புதிய விண்ணுந்துப் பயண நேரம் பின்னர் அறியத்தரப்படும். தயவுசெய்து காத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இ. ______________________________

பேர்ண் தொடருந்து நிலையத்திலிருந்து சூரிச் விண்ணுந்து நிலையத்தை நோக்கிச் செல்வதற்குப் பதினேழாம் மேடைக்கு வரவேண்டிய தொடருந்து இரண்டாம் மேடைக்கு வருகிறது. தயவுசெய்து பயணிகள் அனைவரும் தொடருந்து மேடை மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளவும்.

(3×2=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 03 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 04 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |